இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 352 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 16 – வியாழக்கிழமை 01 ஆகஸ்டு 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 352 : Thiruvalluvar Year - 2055 - Aadi 16 - Thursday 01 August 2024 - Chennai 16 Pages ₹ 5.00

## மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும்

# ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம்: ஆக.9 அன்று தொடங்கி வைக்கிறேன்!

## கொளத்தூர் எவர்வின் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கபாலீசுவரர் கலை – அறிவியல் கல்லூரி விழாவில் நல உதவிகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 1 -**

**மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தை வருகிற ஆகஸ்ட் 9ஆம் நாள் கோவையில் நான் தொடங்கி வைக்கப் போகிறேன் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.07.2024) சென்னை, கொளத்தூர், எவர்வின் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாடு முழுக்க நான் சுற்றிக் கொண்டிருந்தாலும், கொளத்தூருக்கு வருகின்றபோது என்னையே அறியாமல் ஒரு உற்சாகம், ஒரு ஊக்கம், ஒரு எழுச்சி ஏற்படுகின்றது. அதுவும் கொளத்தூரில் இருக்கக்கூடிய மாணவச் செல்வங்களை பார்க்க வருகின்றபோது அதைவிட அதிகமான அளவிற்கு மகிழ்ச்சியும், எழுச்சியும் ஏற்படுகின்றது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2024) சென்னை, கொளத்தூர், எவர்வின் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணிபுரிய 3 உதவிப் பேராசிரியர்கள், ஒரு உடற்கல்வி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் விஜயகுமார், இந்து சமய அறநிலையத் துறை பள்ளி மற்றும் கல்லூரி ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், எவர்வின் பள்ளி முதல்வர் புருஷோத்தமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கொளத்தூருக்கு வந்தாலே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது!**

அதனால்தான், எவ்வளவு வேலைகள் இருந்தாலும், முடிந்த அளவுக்கு பத்து நாளுக்கு ஒரு முறையோ; வாரத்துக்கு ஒரு முறையோ கொளத்தூருக்கு நான் வந்து விடுகிறேன். கொளத்தூருக்கு வந்தாலே ஒரு புத்துணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது!

எனக்காக கொளத்தூரை பாதுகாக்கக் கூடியவராக என்னுடைய சார்பில் நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்.

கொளத்தூர் தொகுதியைப் பொருத்த வரைக்கும், நம்முடைய பணிகளால் ஒரு முன்மாதிரி தொகுதியாக இதை மாற்றிக் கொண்டிருக்கிறோம். இப்படி சொல்வதினால் எனக்கு ஏதோ ஒரு சுயநலம் (selfish) என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 234 தொகுதிகளும் என்னுடைய தொகுதிகள்தான். அது ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் சரி, தோழமைக் கட்சியாக இருந்தாலும் சரி, அனைத்து தொகுதிகளிலும் ஒரே கண்ணோட்டத்தோடு தான் நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். அந்த அடிப்படையில்தான், இந்த கொளத்தூர் தொகுதியில்,

- புதிய வட்டாட்சியர் அலுவலகம்
- புதிய காவல் துணை ஆணையாளர் அலுவலகம்
- புதிய காவல் நிலையம்
- புதிய தீயணைப்பு நிலையம்
- புதிய சார்பதிவாளர் அலுவலகம்

ஆகியவை விரைவில் அமைய இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவும் கொளத்தூர் தொகுதிக்கு மட்டும் இல்லை; தமிழ்நாட்டின் பல தொகுதிகளுக்கு வர இருக்கிறது.

**சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் வைத்த வேண்டுகோள்!**

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்களுடைய தொகுதிக்குத் தேவையான பத்து திட்டங்களைக் கொடுக்கவேண்டும் என்று நான் சட்டமன்றத்தில் அறிவித்தேன். அது ஆளுங்கட்சி மட்டுமல்ல; எதிர்க்கட்சி மட்டுமல்ல; அனைத்து 234 தொகுதிகளில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் அவசரமாக உங்கள் தொகுதிக்கு முதற்கட்டமாக 10 திட்டங்களை கொடுங்கள். அந்த 10 திட்டங்களில் எதை உடனடியாக நிறைவேற்ற முடியுமோ இந்த ஆண்டிற்குள் நிறைவேற்றி தருகிறோம் என்று சொல்லி, அதை அறிவித்து, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கி அந்தப் பணியை செய்து கொண்டிருக்கிறோம். இந்தியாவில் எந்த மாநிலங்களிலும் கிடையாது. நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான். நம்முடைய கழக ஆட்சியில்தான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் தான்.

எந்த விருப்பு வெறுப்பும் இல்லாமல் எதிர்க்கட்சியினர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிகளுக்கு முக்கியத்துவம் தந்து, திட்டங்களை எல்லாம் நாம் வரிசைப்படுத்தி, முறைப்படுத்தி, விரைவுப்படுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கக் கூடிய ஆட்சிதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி!

**எங்களுக்கு வாக்களிக்காதவர்கள் வருந்தும் அளவுக்கு நல்லாட்சி தருகிறோம்!**

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். சட்டமன்றத் தேர்தல் முடிந்து ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் அந்த வெற்றியை நம்முடைய தலைவருடைய நினைவிடத்திற்குச் சென்று நான் மாலை வைத்து, மரியாதை செய்தேன். அப்போது பத்திரிகை நிருபர்கள் என்னிடத்தில் கேட்ட கேள்விக்கு பதிலளித்துக் கொண்டிருந்தபோது இடையில் ஒரு கேள்வி. அந்த கேள்விக்கு நான் பதில் சொன்னேன்.

இந்த ஆட்சி, எங்களுக்கு ஓட்டு போட்ட மக்களுக்காக மட்டுமல்ல; ஓட்டுப் போட தவறியவர்களுக்கும் சேர்த்து, அதாவது ஓட்டு போட்டவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். ஓட்டுப் போடாதவர்கள் ஐய்யய்யோ இப்படிப்பட்ட ஆட்சிக்கு போடா மல் விட்டுவிட்டோமே என்று வருத்தப்படக் கூடிய அளவிற்கு எங்கள் ஆட்சி இருக்கும் என்று அன்றைக்கு சொன்னேன். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

பல்வேறு திட்டங்கள் அதில் குறிப்பாக, நம்முடைய பெருமதிப்பிற்குரிய அய்யா பொன்னம்பல அடிகளார் வந்தவுடனே சொன்னார்கள். இதுவரைக்கும் அறநிலையத் துறையில் இப்படி ஒரு அமைச்சர் இருந்து பணியாற்றியதை நான் பார்த்ததே கிடையாது என்று என்னிடம் பெருமையாக சொன்னார்.

**அறநிலையத் துறையில் அமைச்சர் சேகர்பாபுவின் செயல்!**

அந்த அளவிற்கு, தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், அதில் அமைச்சராக இருக்கக் கூடிய சேகர்பாபு அவர்கள் மற்றும் அவருடன் துணையாக இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதையெல்லாம் இப்போது பட்டியலிட்டு சொல்லவேண்டும் என்றால், நேரம் போதாது. இந்த நிகழ்ச்சி முழுக்க அது பற்றியேதான் பேசிக் கொண்டு இருக்கவேண்டும். இன்னும் பல நிகழ்ச்சி களுக்கு நான் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால், ஹைலைட்டான சில திட்டங்களை தலைப்புச் செய்திகளாக மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

> **“இதுவரைக்கும் 1921 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தி இருக்கக்கூடிய ஆட்சிதான் இந்த திராவிட மாடல் ஆட்சி. 6147 கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் சொத்துக்களை மீட்டியிருக்கிறோம். கோயில்கள் சார்பில் 10 கல்லூரிகளை உருவாக்கி வருகிறோம். அதில் ஒரு கல்லூரிதான் மயிலை கபாலீஸ்வரர் கல்லூரி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!”**

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### வயநாடு நிலச்சரிவில்

# பலியானவர்களின் எண்ணிக்கை 270 ஆக அதிகரிப்பு!

### முதல்வர் அனுப்பிய தமிழ்நாடு அதிகாரிகள் குழு மீட்பு பணியில் தீவிரம்!

*வயநாடு, ஆக. 1 -*

*கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் முண்டக்கை, சூரல்மலை மற்றும் அட்டமலை ஆகிய இடங்களில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 270 ஆக அதிகரித்துள்ளது. அங்குள்ள 3 கிராமங்கள் முற்றிலுமாக துண்டிக்கப் பட்டதால், 400 குடும்பத்தினரை மீட்பதற்காக ராணுவம், விமானப்படை, கடற்படை வீரர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த 60 பேரின் உடல்கள், பல கிலோ மீட்டர் தூரம் சாலியாற்றில் மிதந்து வந்த நிலையில், அவற்றை தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் மீட்டனர்.*

*நிலச்சரிவில் சிக்கி மண்ணில் புதைந்த உடல்களை கண்டறிய 3 மோப்ப நாய்கள் வரவழைக்கப்பட்டன. நிலச்சரிவு ஏற்பட்டு தனித் தீவுகளாக மாறியுள்ள இடங்களில் தற்காலிக பாலம் அமைக்கப் பட்டு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.*

*மேலும், வயநாடு நிலச்சரிவில் சிக்கியவர்களில் ஆயிரம் பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர்.*



*இதனிடையே, நிலச்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள வயநாடு பகுதியில் முதல்வர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அதிகாரிகள் கொண்ட குழுவினர் கேரள அதிகாரிகளுடன் இணைந்து 2வது நாளாக மீட்புப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.*

---

# டெல்டா பாசனத்திற்காக கல்லணை திறப்பு - விவசாயிகள் மகிழ்ச்சி!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – அன்பில் மகேஷ் பொய்யாமொழி – டி.ஆர்.பி. ராஜா – சிவ.வீ. மெய்யநாதன் திறந்து வைத்தனர்!

தஞ்சாவூர், ஆக. 1–

கர்நாடக மாநிலம் காவிரி நீர்பிடிப்பு பெய்த கனமழையால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால், மேட்டூர் அணை கடந்த 28ம் தேதி டெல்டா மாவட்ட பாசனத்திற்காகவும், ஆடி பெருக்கு விழாவை கொண்டாடவும் தண்ணீர் முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி திறக்கப்பட்டது.

இந்நிலையில், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பால் நேற்று அணை 120 அடியை எட்டியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர், கரூர், முக்கொம்பு பகுதிகளை கடந்து, தஞ்சாவூர் மாவட்ட எல்லையான கல்லணைக்கு நேற்று(31ம் தேதி)அதிகாலை வந்தது.

இதையடுத்து கல்லணையை அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி. ராஜா, சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

அதுபோது எம்.எல்.ஏ.க்கள், மாவட்ட ஆட்சியர், அதிகாரிகள், விவசாயிகள் உடனிருந்தனர். இதையடுத்து, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் தண்ணீர் திறக்கப்பட்டது. அப்போது விவசாயம் செழிக்க வேண்டி பூக்களையும், நவதானியங்களையும் ஆற்றில் விட்டனர்.

பிறகு காவிரியில், 40 ஷட்டர்களும், வெண்ணாற்றில், 33, கொள்ளிடத்தில், 30, கல்லணைக் கால்வாயில், ஆறு, மணற்போக்கியில், 5, கோவிலடி மற்றும் பிள்ளைவாய்க் காலில் தலா ஒரு ஷட்டர்கள் மூலம் பாசனத்திற்காக தண்ணீர் பிரித்து வழங்கப்பட்டது. இதன்படி முதல் கட்டமாக காவிரியில் 1500 கன அடி,வெண்ணாறு ஆயிரம் கன அடி,கல்லணை கால்வாய் 500 கன அடி, கொள்ளிடம் 400 கன அடி என தண்ணீர் திறக்கப் பட்டு பின்னர் படிப்படியாக உயர்த்தப் படும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 12 லட்சம் ஏக்கர் அளவுக்கு பாசன வசதி பெறும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.